இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 93 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 27 – வியாழக்கிழமை 13 நவம்பர் 2025 – கோவை ★ ★ 12 + 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 93: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 27 - Thursday 13 November 2025 - Kovai ★★ 12+10 Pages ₹ 5.00




சென்னை கிழக்கு, சென்னை வடக்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் தங்கச்சாலை அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.கிரிராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், ஜட்ரீம் மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், சட்டத் துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு சூழ்ச்சி செய்து தேர்தல் ஆணையத்துடன் கூட்டணி அமைத்து வாக்குரிமையைப் பறிக்கும்

# S.I.R.-க்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

## தமிழகமெங்கும் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் திரண்டனர்!

**சென்னை, நவ. 13 -**

**“தேர்தல் ஆணையத்துடன் கூட்டணி அமைத்து ஒன்றிய பா.ஜ.க. அரசின் சூழ்ச்சியால் நடைபெறும் S.I.R.-க்கு எதிராக ஆர்ப்பாட்டம் தமிழ்நாடெங்கும் மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்றது. இதில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் திரண்டனர்.**

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளதை கண்டித்து நேற்று முன்தினம் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னையில் 4 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையம் தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணியை மேற்கொண்டு வருகிறது. இதற்கு தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் கொண்டு வருவது வாக்காளர்களை நீக்கும் தந்திரம். வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் காலகட்டத்தில் பண்டிகைகள் வருவதால் வாக்காளர் பட்டியலில் சேர விரும்பும் வாக்காளர்களின் பெயர் விடுபட நேரிடும்.

தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002, 2005 வாக்காளர் பட்டியல்கள் முழுமையற்றதாகவும், குழப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன. எனவே, இந்த எஸ்.ஐ.ஆர். சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிட வேண்டும். தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்திய தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டு வந்துள்ளதை கண்டித்து ‘மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நவம்பர் 11ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவித்திருந்தது. அதன்படி அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### தொடர்ந்து செயலாற்றுவோம்!

## மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்போம்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, நவ. 13 -**

**S.I.R.-ஐ தடுப்பதே நம்முன் இப்போதுள்ள ஆகப்பெரும் கடமை! தொடர்ந்து செயலாற்றுவோம்! நம் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்போம் என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:-

SIRஐத் தடுப்பதே நம்முன் இப்போதுள்ள ஆகப்பெரும் கடமை!

ஒருபுறம், மக்களாட்சியின் அடிப்படையான வாக்குரிமையையே பறிக்கும் #SIR எனும் ஆபத்துக்கு எதிராகச்



சட்டப் போராட்டம் களப் போராட்டம் மறுபுறம், தொடங்கப்பட்டுவிட்ட #SIR பணிகளில் குளறுபடிகளைத் தடுத்திட #WarRoom #Helpline

களப் போராட்டத்தில், இன்று தமிழ்நாடெங்கும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பதாகைகளை ஏந்தியும் கண்டன முழக்கங்களை எழுப்பியும் #SIR எனும் பேராபத்துக்கு எதிராகக் கூடியுள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர்!

தொடர்ந்து செயலாற்றுவோம்! நம் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்போம்!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

**கு.செல்வப்பெருந்தகை, வைகோ, தொல்.திருமாவளவன், பெ.சண்முகம் பங்கேற்பு!**

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சைதாப்பேட்டை வளைவு அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை பங்கேற்றார். சென்னை தென்மேற்கு மாவட்டம், சென்னை மேற்கு மாவட்டம் சார்பில் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை கிழக்கு, சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தங்கசாலை மணிக்கூண்டு அரசு அச்சகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, சி.பி.எம். மாநில செயலாளர் பெ.சண்முகம், வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாதவரம் பஜார் தெருவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர். இதே போல மற்ற மாவட்டங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்றனர்.